
தலைவர் ஹென்றி பி. ஐரிங்
பிரதான தலைமையில் முதலாம் ஆலோசகர்



# உண்மையான சீஷர்களாகுதல்

நம்மோடு அவரது ஆவியை நாம் பெற்றிருக்கும்படியாக எப்போதும் இரட்சகரை நினைவுகூர்வோம் மற்றும் அவரது கட்டளைகளைக் கைக்கொள்வோம் என பரலோக பிதாவிடம் வாக்களிக்கும் சிலாக்கியம் ஒவ்வொரு திருவிருந்துக் கூட்டத்திலும் நமக்கு இருக்கிறது (மரோனி 4:3; 5:2; கோ.உ 20:77,79 பார்க்கவும்). அவரது நாமத்தை நம்மீது தரித்துக்கொள்ளும்போது, அவரை நினைவுகூர்வது எப்போதும் இயற்கையாகவே நமக்கு வருகிறது. நாம் பல வழிகளில் அப்படிச் செய்கிறோம், ஆனால் விசேஷமாக அவரது நாமத்தில் நாம் பிறருக்கு சேவை செய்யும்போதும், அவரது பரிசுத்த வார்த்தைகளை வாசிக்கும்போதும், நாம் என்ன செய்ய வேண்டும் என அவர் விரும்புகிறார் என அறிய ஜெபிக்கும்போதும் அப்படிச் செய்கிறோம்.

ஒரு வாலிபனின் ஞானஸ்நானத்தை நான் நிறைவேற்றியபோது எனக்கு அது நிகழ்ந்தது. அவரது சுவிசேஷத்தைப் போதிக்கவும், அவரது சுவிசேஷத்தையும் அவரையும், அவரது உண்மையான சபையைப்பற்றியும் சாட்சியளிக்கவும், ஒரு ஊழியக்காரனாக இரட்சகரின் நியமிக்கப்பட்ட ஊழியக்காரர்களால் நான் அழைக்கப்பட்டிருக்கிறேன் என நான் அறிவேன். இரட்சகர் மீது விசுவாசத்துடன் மனந்திரும்பி, அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஊழியக்காரர்களில் ஒருவரால் ஞானஸ்நானம் கொடுக்கப்படுகிறபோது, இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தியின் வல்லமையால் அவன் சுத்திகரிக்கப்படுவான் என எனது ஊழியத்தோழனும் நானும் அந்த வாலிபனுக்கு வாக்களித்திருந்தோம்.

ஞானஸ்நானத் தொட்டியின் தண்ணீரிலிருந்து அந்த வாலிபனை நான் தூக்கியபோது, "நான் சுத்தமானேன், நான் சுத்தமானேன்" என அவன் என் காதில் கிசுகிசுத்தான். யோர்தான் நதியில் யோவான் ஸநானனால் கொடுக்கப்பட்ட இரட்சகரின் ஞானஸ்நானத்தை நான் அக்கணத்தில் நினைவுகூர்ந்தேன். இன்னும் மேலாக, உயிர்த்தெழுந்த, ஜீவிக்கிற இரட்சகரின் இரட்சிப்பின் பணியை, பரிசுத்த ஆவியானவர் வருகை தந்து, யோவான் செய்தது போல நான் செய்வதாக நினைத்தேன்.

அவருடன் நமது புத்தியின் ஞாபகத்தையும் அனுபவங்களையும் சார்ந்திருப்பதை விட, இரட்சகரை நினைவுகூர்வது எனக்கும் நம் ஒவ்வொருவருக்கும், அதிகமானது. தற்போது அவருக்கு நெருக்கமாக நம்மை இழுக்கக்கூடிய தெரிந்தெடுத்தல்களை நாம் தினமும் செய்யலாம்.

வேதம் வாசிப்பது எளிமையான தெரிந்தெடுப்பாக இருக்கலாம். அப்படிச் செய்வதால் அவருக்கு நெருக்கமாக இருக்கும் உணர்வுகளை நாம் பெறலாம். நான் மார்மன் புஸ்தகத்தை வாசிக்கும்போது மிகஅடிக்கடி எனக்கு அந்த நெருக்கம் வருகிறது. நெப்பியும் லேகியும் இரட்சகரை தனிப்பட்ட விதமாக அறிந்ததுபோல அவரை விவரிக்கிற அவர்களின் குரலை, 2 நெப்பியின் அதிகாரங்களை வாசிக்கிற முதல் நிமிடங்களில் என் மனதில் நான் கேட்கிறேன். ஒரு நெருக்கமான உணர்வு வருகிறது.

வேதங்களிலுள்ள பிற இடங்கள் விசேஷமாக உங்களை அவரிடம் இழுக்கலாம். ஆனால் எங்கேயும் எப்போதும் இரட்சகரை நினைக்க தேவ வார்த்தையை தாழ்மையாகவும் உண்மையான எண்ணத்துடனும் நீங்கள் வாசிக்கும்போது, உங்கள் அன்றாட வாழ்க்கையில் அவரது நாமத்தை உங்கள் மீது தரித்துக்கொள்ள உங்கள் வாஞ்சையை நீங்கள் அதிகரிப்பீர்கள்.

கர்த்தரின் சபையில் நீங்கள் சேவை செய்கிற விதத்தை அந்த வாஞ்சை மாற்றும். உங்களுக்கு எளிய அழைப்பாக தோன்றுவதைக்கூட சிறப்பாகச் செய்ய பரலோக பிதாவின் உதவிக்காக நீங்கள் ஜெபிப்பீர்கள். உங்களையே நீங்கள் மறக்கிற திறமை மற்றும் நீங்கள் சேவை செய்ய அழைக்கப்பட்ட அவர்களுக்கு இரட்சகர் எதை செய்ய விரும்புகிறார் என்பதில் அதிக கவனம் செலுத்துவதே நீங்கள் கேட்கிற உதவி ஆகும்.

சுவிசேஷம் மட்டுமே கொடுக்கிற சமாதானத்தைக் கண்டுபிடிக்க எங்கள்

பிள்ளைகளுக்கு எப்படி உதவுவது என அறிய நான் ஜெபித்தபோது, அவர்களுடன் எனது சேவையில் அவரது கரத்தையும் அவரது நெருக்கத்தையும் நான் உணர்ந்திருக்கிறேன். அத்தருணங்களில் ஒரு வெற்றிபெற்ற பெற்றோராகப் பார்க்கப்படுவதைப்பற்றி நான் கவலைப்படவில்லை, ஆனால் எனது பிள்ளைகளின் வெற்றியையும் நல்வாழ்க்கையையும்பற்றி நான் அதிகமாய்க் கவலைப்பட்டேன்.

நாம் சேவை செய்பவர்களுக்கு இரட்சகர் எதைக் கொடுப்பாரோ அதைக் கொடுக்கிற வாஞ்சை, உண்மையாகவே இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரலோக பிதாவைக் கெஞ்சுகிற ஜெபங்களுக்கு நடத்துகிறது. இரட்சகரின் நாமத்திலே, அவரில் விசுவாசத்துடன் அவ்விதமாக நாம் ஜெபிக்கும்போது, பிதா பதிலளிக்கிறார். நமக்கு வழிகாட்டவும், ஆறுதலளிக்கவும், ஊக்கமளிக்கவும் அவர் பரிசுத்த ஆவியை அனுப்புகிறார். பரிசுத்த ஆவி எப்போதும் இரட்சகரைப்பற்றி சாட்சி அளிப்பதால், (3 நெப்பி 11:32, 36; 28:11; ஏத்தேர் 12:41 பார்க்கவும்), கர்த்தரை நமது முழு இருதயத்தோடும், மனதோடும், பெலத்தோடும் நேசிக்கிற ஆற்றல் அதிகரிக்கிறது. (மாற்கு 12:30; லூக்கா 10:27; கோ.உ 59:5 பார்க்கவும்).

நாம் அவருக்கு ஊழியம் செய்யும்போதும், அவரது வார்த்தையை ருசிக்கும்போதும், அவரது நாமத்தில் விசுவாசத்தோடு ஜெபிக்கும்போதும், அன்றாட மற்றும் தற்சமய நினைவுகூர்தலின் ஆசீர்வாதங்கள் மெதுவாகவும் நிதானமாகவும் வரும். இப்பூமியில் அவரது ராஜ்யத்திலும் பின்னர் அவரது பிதாவுடன் வரவிருக்கிற மகிமையான உலகத்திலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களாக நம்மை இந்த நினைவுகூர்தல் வடிவமைக்கும்.

---

இச்செய்தியிலிருந்து கற்பித்தல்

அவரிடம் நெருங்கிவர அன்றாட தெரிந்தெல்களைச் செய்து, இரட்சகரை எப்போதும் நினைவில் கொள்ள தலைவர் ஐரிங் ஆலோசனையளிக்கிறார். அவரை எப்போதும் நினைவில்கொள்ள உடன்படிக்கையை குறிப்பிடுகிற திருவிருந்து ஜெபங்களை நீங்கள் கற்பிப்பவர்களுடன் நீங்கள் வாசிக்கலாம் (மரோனி 4:3; 5:2; கோ.உ 20:77,79 பார்க்கவும்). இரட்சகரை நினைவில்கொள்ள ஒவ்வொரு நாளும் அவர்கள் செய்யக்கூடியவற்றை ஒரு பட்டியலிட நீங்கள் கற்பிப்பவர்களை அழைப்பதைக் கருத்தில் கொள்ளவும். ஒருவருக்கொருவரது வெற்றிக்கும் நலத்துக்கும் பரலோக பிதாவிடம் ஜெபிக்க அவர்களை அழைப்பதையும் நீங்கள் கருத்தில் கொள்ளலாம். அவ்விதமாகவே அவர்களுக்காக ஜெபிப்பதைக் கருத்தில் கொள்ளவும்.

## வாலிபர்

### கர்த்தரை தினமும் நினைவுகூர்தல்

நண்பர்கள், வேலைகள், வீட்டுவேலை, தொலைக்காட்சி போன்ற நமது கவனத்தை ஈர்க்கிற அநேகம் உள்ளன. ஆனால் ஒவ்வொரு வாரமும் நாம் பரலோக பிதாவிடம் “[அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை] எப்போதும் [நாம்] நினைவுகொள்கிறோம்” என வாக்குத்தத்தம் செய்கிறோம்.(கோ.உ20:79)

இரட்சகரை எப்போதும் நினைவுகொள்ள நமக்குதவக்கூடிய “தெரிந்தெல்களை தினமும் நாம் செய்ய” முடியும் என தலைவர் ஐரிங் சொல்கிறார். ஒவ்வொரு நாளும் இரட்சகரை அதிகமாக நினைவுகொள்ள இம்மாதத்தில் ஒரு இலக்கை ஏற்படுத்துவதை கருத்தில் கொள்ளவும். அவருடன் உங்கள் உறவைக் கட்ட ஒரு நாள்காட்டியை உருவாக்கி, ஒரு நாளைக்கு ஒன்றைச் செய்யவும். வேதங்களை வாசித்தல், விசுவாசத்தில் ஜெபித்தல், இரட்சகருக்கும் பிறருக்கும் சேவை செய்தல் போன்றவற்றை தலைவர் ஐரிங் பட்டியலிடுகிறார். குறிப்பிதழ் எழுதுதல், சபைக்கூட்டங்களுக்கு செல்லுதல், பொது மாநாட்டு செய்தியைக் கேட்டல், ஆலயம் செல்லுதல் மற்றும் துதிப்பாடல்கள் பாடுதல் போன்றவையும் உள்ளன. பட்டியல் நீள்கிறது! நாம் இரட்சகரை தினமும் நினைவு கொள்ளும்போது, “ஆசீர்வாதங்கள் … மெதுவாகவும், நிதானமாகவும் வரும் …, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களாக நம்மை வடிவமைக்கும்” என தலைவர் ஐரிங் வாக்களிக்கிறார்.

## பிள்ளைகள்

### ஏராளமான அன்பு

நாம் வேதங்களை வாசிக்கும்போது அல்லது ஜெபிக்கும்போது, பரலோக பிதாவும் இயேசுவும் நம்மை எவ்வளவு நேசிக்கிறார்கள் என நாம் உணர முடியும். ஒரு பெரிய இருதயத்தினுள் சில சிறு இருதயங்கள் வரையவும். ஒவ்வொரு முறையும் நீங்கள் ஜெபிக்கும்போது அல்லது உங்கள் வேதங்களை வாசிக்கும்போது ஒரு இருதயத்தை வண்ணமிடவும். பரலோக பிதாவுக்கும் இயேசுவுக்கும் நெருக்கமாக உணர நாம் வேறு என்ன செய்யலாம்?

© 2017 எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாடுகளில் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/16. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/16. 97930 418 ன் மொழிபெயர்ப்பு.

# வழிதவறிப் போனவர்களை அன்பால் சூழுதல்

இச்செய்தியை ஜெபத்துடன் படித்து, எதைப் பகிர்வது என அறிய உணர்த்துதலுக்காக நாடவும். ஒத்தாசைச் சங்கத்தின் நோக்கத்தைப் புரிந்துகொள்ளுதல் நித்திய ஜீவிய ஆசீர்வாதங்களுக்காக எவ்விதம் தேவ குமாரத்திகளை ஆயத்தப்படுத்தும்?

விசுவாசம் குடும்பம் ஒத்தாசை

“உண்மை என்னவெனில் பரிபூரணமான குடும்பங்கள் இல்லை ...,” என பிரதான தலைமையின் இரண்டாம் ஆலோசகர், தலைவர் டியட்டர் எப். உக்டர்ப் சொன்னார். “உங்கள் குடும்பங்கள் எதிர்கொள்கிற பிரச்சினைகள் எதுவாயினும், அவற்றை நிவர்த்தி செய்ய நீங்கள் என்ன செய்வதாயிருந்தாலும், தீர்வின் தொடக்கமும் முடிவும் கிறிஸ்துவின் தூய அன்பாகிய தயாளம்தான்.”[1]

சுவிசேஷத்தில் முழுமையாக பங்கேற்காதவர்களைப்பற்றி ஒத்தாசைச் சங்க முன்னாள் பொதுத் தலைவர் லின்டா கே. பர்ட்டன் சொன்னார்: “பரலோக பிதா தன் அனைத்து பிள்ளைகளையும் நேசிக்கிறார். ... நீங்கள் எங்கிருந்தாலும், பாதையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அதைப் பொருட்படுத்தாமல் அவர்கள் வீடு திரும்ப வேண்டும் என அவர் விரும்புகிறார்.”[2]

“[உங்கள் பிள்ளைகள்] எவ்வளவு வழிதவறியிருந்தாலும், ... நீங்கள் அவர்களுடன் பேசும்போது கோபத்தோடு பேசாதீர்கள், கண்டிக்கும் ஆவியோடு, கடினமாகப் பேசாதீர்கள். “அவர்களுடன் அன்பாகப் பேசுங்கள்”[3] என தலைவர் ஜோசப் எப். ஸ்மித் போதித்தார் (1838–1918).

பத்து வெள்ளிக்காசுகளை வைத்திருந்து அவற்றில் ஒன்றை இழந்தவர்களுக்கு இரட்சகர் கொடுத்த அறிவுரையை எழுபதின்மரின் மூப்பர் ப்ரெண்ட் எச். நீல்சன் வலியுறுத்தினார்: “கண்டுபிடிக்கும்வரை தேடுங்கள். காணாமற்போனவர் உங்கள் மகனோ அல்லது உங்கள் மகளோ, உங்கள் சகோதரன் அல்லது சகோதரியானால், ... நாம் செய்யக்கூடியது எல்லாம், அந்நபரை நமது முழு இருதயங்களோடு நேசிப்பதுதான். ...

“நமது வாழ்க்கையில், காணாமற்போனவர்களை எவ்வளவு சிறந்த விதமாக அணுகுவது என அறியவும், தேவைப்படும்போது, நாம் நேசித்து, கண்காணித்து, கெட்ட குமாரனுக்காக காத்திருக்கும்போது, நமது பரலோக பிதா மற்றும் அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் அன்பையும் பொறுமையையும் பெறும்படிக்கும் நீங்களும் நானும், வெளிப்படுத்தல் பெறுவோமாக.”[4]

பிரதான தலைமையில் முதலாம் ஆலோசகர், தலைவர் ஹென்றி பி. ஐரிங், சொன்னார், “நான் நேசித்த ஒருவர் பாவநிவர்த்தியின் வல்லமையை தேடி உணர வேண்டும் என விசுவாசத்துடன் ஜெபித்திருக்கிறேன். அவர்களுக்கு உதவ மனித தேவதூதர்கள் வர வேண்டும் என நான் விசுவாசத்துடன் ஜெபித்திருக்கிறேன், அவர்கள் வந்தார்கள்.

“அவரது பிள்ளைகள் ஒவ்வொருவரையும் இரட்சிக்க தேவன் வழிகளை வகுத்திருக்கிறார்.”[5]

## கூடுதல் வசனங்களும் தகவலும்

மத்தேயு 18:12; ஆல்மா 31:35; 3 நெப்பி 13:32; கோ.உ 121:41-42

## குறிப்புகள்


1. Dieter F. Uchtdorf, “In Praise of Those Who Save,” *Liahona,* May 2016, 79, 80.
2. Linda K. Burton, in Sarah Jane Weaver, “Sister Burton, Sister Wixom Visit Church’s Pacific Area,” Church News, Apr. 2, 2013, .
3. *Teachings of Presidents of the Church: Joseph F. Smith* (1998), 254.
4. Brent H. Nielson, “Waiting for the Prodigal,” *Liahona,* May 2015, 103.
5. Henry B. Eyring, “To My Grandchildren,” *Liahona,* Nov. 2013, 71.


### இதைக் கருத்தில் கொள்ளவும்

சுவிசேஷக் கொள்கைகளின்படி வாழ விரும்பாதவர்களுக்கு நாம் தொடர்ந்து எப்படி தயாளத்தைக் காட்ட முடியும்?

© 2017 எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாடுகளில் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/16. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/16. 97930 418 ன் மொழிபெயர்ப்பு